**11.8.2025**

பெயர் - கிருஸ்ணன் **(D.W.2)**

**(** துவங்கப்படும் நேரம் **- 11.10 AM)**

**(**முடிக்கப்பட்ட நேரம் **- 12.20 PM)**

**O.S. No.201/2017**

<u>**10** முதல் **13** வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-**</u>

1964 ல் தாவா சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டு திம்மாளின் பங்கிற்கு வந்ததாகவும் அதன் அடிப்படையில் அவர் உயில் எழுதியதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 1964 ல் பாகப்பரிவினை நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் சம்பந்தமாக அந்த சமயத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். 1972 ல் உயில் எழுதியதாக குறிப்பிட்டப்பட்டுள்ள சமயத்தில் என்ன நடைபெற்றது என்பதும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். உயிலில் உள்ள விவரங்கள் எனக்கு எவ்வாறு தெரியவந்தது என்பது குறித்து நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். உயில் குறித்து மற்றவர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றும் நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரிதான். என் அப்பா சொல்லி தெரிந்து கொண்டேன். தாவா சொத்தினை மரியா கவுடர் தான் வாங்கினார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தினை யார் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்து எவ்வாறு வந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்திற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

1964 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் கூறியநிலையில் அந்த பாகப்பிரிவினையானது பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை என்று சொன்னால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் பாகப்பிரினை பத்திரம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் என்னிடம் உள்ளது.

நாளது தேதிவரை அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1964 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை திம்மம்மாள், முடலி கவுடர், திம்மே கவுடர், உட்சே கவுடர் ஆகியோர்களுக்கிடையே மட்டுமே ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். மற்ற வாரிசுகள் இந்த பாகப்பிரினையில் கையொப்பமும் செய்யவில்லை, கலந்து கொள்ளவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மரியா கவுடரின் மற்ற பெண் வாரிசுகள் அவர்களுக்கு சேர வேண்டிய பாகத்தை மேற்படி நான்கு ஆண் வாரிகள் மட்டுமே எடுத்துகொள்ளளாம் என்று ஒப்புதல் ஆவணங்கள் ஏதாவது ஏற்படுத்தியுள்ளார்களா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் மரியா கவுடரின் வாரிசுகள் 4 ஆண்மக்கள் மட்டுமே என்று கூறி ஏதேனும் ஆவணத்தையோ, வாரிசு சான்றிதழையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மரியா கவுடரின் இறப்பு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்தள்ளேனா என்றால் இல்லை. மரியா கவுடருக்கு 7 வாரிசுகள் உள்ள நிலையில் என் அப்பா மூடர்லி கவுடர், திம்மம்மாள், திம்மே கவுடர், உட்சே கவுடர் ஆகியோர்களுக்கு இடையே மட்டுமே ஏற்பட்ட பாகப்பிரிவினை மற்ற பெண் வாரிசுகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மரியா கவுடர் இறப்பிற்கு பின்னர் அவருடைய வாரிசுகள் திம்மாளை சேர்த்து 8 நபர்கள் என்றும் அனைவருக்கும் மரியா கவுடரின் சொத்துக்களில் உரிமை உள்ளது என்று சொன்னால் சரிதான். மரியா கவுடரின் சொத்துக்களில் அவரின் வாரிசுகளான 8 நபர்களுக்கும் உரிமை உள்ள நிலையில் திம்மம்மாள் மட்டும் வழக்கு சொத்து சம்பந்தமா உயில் எழுத பாத்தியதை இல்லை என்றும் அவர் உண்மையில் உயில் எழுதியிருந்தால் என்ன காரணத்திற்காக எனக்கும் என் தந்தைக்கு மட்டும் சொத்தினை எழுதிவைத்தார் என்பதற்கான விளக்கத்தையும் இந்த உயிலில் குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. மற்ற வாரிசுகளுக்கும் எதனால் சொத்தினை கொடுக்கவில்லை என்பது குறித்து உயிலில் குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

1972 ல் எழுதிய உயிலில் யார் யார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயிலை பார்த்து யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் அந்த கையொப்பத்தை என்னால்

அடையாளம் காண இயலவில்லை. தாவா சொத்தில் உள்ள ஒரு பாகத்தினை பொறுத்து திம்மம்மாள் விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தாவா சொத்தின் ஒரு பகுதியை திம்மம்மாள் விற்பனை செய்ததாக நான் என்னுடைய எதிர்வழக்குறையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அவ்வாறு விற்பனை செய்த கிரைய பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக தாக்கல் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. திம்மம்மாள் என் அப்பாவிற்கு விற்பனை செய்த ஒரு பாகம் எத்தணை விஸ்தீரனம் உடையது என்றால் 50 சென்ட் நிலம் ஆகும். 50 சென்ட் நிலத்தை திம்மம்மாள் என் அப்பாவிற்கு விற்பனை செய்தார் என்ற விவரத்தை எனது எதிர் வழக்குறையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 50 சென்ட் நிலத்தை விற்பனை செய்த கிரையபத்திரத்தில் பாக்கி சொத்து பொறுத்து எனக்கும் என் அப்பாவிற்கும் சேர்த்து உயில் எழுதியதாக கூறியுள்ள விவரத்தை குறிப்பிட்டுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. உண்மையில் உயில் எழுதப்பட்டிருந்தால் என் அப்பாவிற்கு விற்பனை செய்த சொத்தின் கிரைய பத்திரத்தின் உயில் குறித்து குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. கிரைய பத்திரத்தை தாக்கல் செய்தால் உண்மை தெரிவந்துவிடும் என்ற காரணத்திற்காக அதை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

உயில் எங்கே, யார் தயார் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் எழுதியிருப்பார்கள். அந்த உயிலின் உண்மை தன்மையை நிரூபிப்பதற்காக நானோ என் அப்பாவோ என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் இல்லை. திம்மம்மள் உயில் எழுதிய சமயத்தில் நல்ல உடல் நிலையிலும், மன நிலையிலும் தான் இருந்தார் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் மருத்துவ சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உயிலில் திம்மம்மாள் கையொப்பம் செய்துள்ளரா அல்லது கைரேகை வைத்துள்ளரா என்றால் கைரேகை வைத்துள்ளார். திம்மம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது என்று சொன்னால் சரிதான். அவருக்கு கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரியல்ல என் தாத்தா தான் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர்.

திம்மம்மாள் உதகை யை சேர்ந்தவர் ஆவார். அவர் கர்நாடகாவில் இருந்து வந்ததாக எனக்கு தெரியவில்லை. அந்த உயிலை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த உயிலில் எழுதிய சங்கதிகள் அனைத்தும் திம்மம்மாளுக்கு படித்து காண்பித்து அவர் புரிந்துகொண்டு கைரேகை வைத்ததாக உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. திம்மம்மாள் தனது கடைசி காலம் வரை என் அத்தை காளம்மாளுடன் தான் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் மைசூர் அருகே உள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார். காளம்மாள் எந்த ஊரை சேர்ந்தவர் என்று சொன்னால் மாண்டியா வை சேர்ந்த ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். அந்த கிராமத்தின் பெயர் என்ன என்றால் ஒன்மார்ன்அல்லி ஆகும். காளம்மாளின் கணவரின் இறப்பிற்கு பின்னர் காளம்மாள் உதகையில் திம்மம்மாளுடன் தான் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. காளம்மாள் அனைவரது வீட்டிற்கும் வந்து செல்வார். காளம்மாள் ஊரில் இறந்துவிட்டார் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் என் வசம் உள்ளதா என்றால் இல்லை.

உயில் இருக்கும் விவரம் எனக்கு எந்த வருடத்தில் தெரியவந்தது என்றால் 1982 ல் தெரியவந்தது. 1982 ற்கு பின் உயில் யாரிடம் இருந்தது என்றால் என் அப்பாவிடம் இருந்தது. அதற்கு முன்பு யாரிடம் இருந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. உயில் இருக்கும் விவரத்தை என்னிடம் யார் கூறினார்கள் என்றால் என் அப்பா கூறினார். 1982 லேயே உயில் இருக்கும் விவரம் எனக்கு தெரியவந்த நிலையில் வருவாய் துறை ஆவணங்களிலும் சிட்டாவிலும் என் பெயரை மாற்றம் செய்ய நாளது தேதிவரை நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் வீட்டு வரி இரசீதில் என் பெயர் வந்துள்ளது. வீட்டு வரி இரசீது என் பெயரில் தான் உள்ளது என்பதை காட்டுவதற்கு இவ்வழக்கில் ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டு வரி இரசீது என் பெயரில் உள்ளது என்பது குறித்து எதிர் வழக்குறையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.292/1993 என்ற 1 ம் வாதியின் கணவரும் மற்ற வாதிகளின் தந்தையுமான உட்சா கவுடர் தாக்கல் செய்த வழக்கில் இவ்வழக்கின் வாதிகளான 1 முதல் 4 வரையானவர்கள் மற்றும் பிரதிவாதிகள் 5 முதல் 13 வரையானவர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. உட்சா கவுடர் தாக்கல் செய்த மேற்படி வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா தான் அந்த வழக்கை நடத்தி வந்தார். நடத்தி வந்த விவரம் தெரியும் அதன் முடிவு எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கினை நீதிமன்றத்தின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.137/2012 என்ற வழக்கினை உட்சா கவுடர் எனக்கெதிராகவும் மூடலி கவுடர் மற்றும் திம்மா கவுடர் அவர்களின் வாரிசுகளுகெதிராக தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அந்த வழக்கில் வாதிகளான 1 முதல் 4 வரையானவர்கள் மற்றும் பிரதிவாதிகள் 5 முதல் 13 வரையானவர்களை தரப்பினர்களாக சேர்க்கபடவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கானது கைவிடப்பட்டதன் (Dismissed for Default) காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தினை பொறுத்து முழுமையான தீர்ப்பு ஏதும் பிறப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் பத்தி 5ல் திம்மம்மாள் இறப்பிற்கு முன்பிருந்தே நான் தாவா சொத்தின் சுவாதினத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நான் தான் சுவாதினத்தில் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தினை வாதிகளும் பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றும் நான் மேற்படி சங்கதிகளை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருவதாக கூறியுள்ள நிலையில் அந்த வீட்டின் மின் இணைப்பிற்கான இரசீதினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உயிலில் எந்த சர்வே எண்ணில் எத்தணை விஸ்தீரணம் உள்ள சொத்தினை எனக்கும் என் தந்தைக்கும் திம்மம்மாள் எழுதியுள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.42/1ல் 58 சென்ட் நிலமும் சர்வே எண்.43/1ல் சுமார் 7 சென்ட் நிலமும் சர்வே எண்.45/1ல் சுமார் 8 சென்ட் நிலமும் அதில் வீடும் உள்ளது. தாவா சொத்து பாகப்பிரிவினை மூலம் திம்மமாளுக்கு வந்திருந்தாள் அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன்.

பிரதிவாதிகள் 10 முதல் 13 வரையிலானவர்களுக்குன்டான அவர்களது தந்தையான உட்சா கவுடரின் பாகம் அவர்களுக்கு கிடைப்பதை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உயில் இருப்பதாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மரியா கவுடரின் வாரிசுகளான 8 நபர்களுக்கும் அவரது சொத்தில் உரிமை உள்ளது என்றும் 4 நபர்களுக்குள்ளாக மட்டும் ஏற்பட்ட பாகப்பிரினை செல்லதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் உயில் எழுதப்பட்டிருந்தால் அதன் நம்பகத்தன்மையை நிரூபிக்க உயிலின் சாட்சிகளை விசாரித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் 1 முதல் 4 வரையினாவர்களுக்கும் பிரதிவாதிகள் 5 முதல் 13 வரையிலானவர்களுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.